குழந்தைகளுக்கு வேதாகமம்
வழங்குபவர்

# ஏசாயா வருங்காலத்தைப் பார்த்தான்



எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Jonathan Hay

தழுவியவர்: Mary-Anne S.

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2014 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

ஏசாயா ஒரு தீர்க்கதரிசி.  தேவன் சொல்வதை ஜனங்களுக்குச் சொல்வது அவனுடைய வேலை.



ஜனங்கள் எப்போதும் தேவனுடைய வார்த்தையைக் கேட்க ஆர்வமற்றவர்களாயிருந்தாலும், ஏசாயா தேவனை விட்டுக்கொடுக்கவில்லை.



ஏசாயா நான்கு ராஜாக்கள் ஆட்சி செய்த காலத்தில் பிரசங்கித்தான்.



உசியா ராஜா எருசலேம் பட்டணத்திலிருந்து யூதா தேசத்தை ஆண்டு வந்தான். முதலிலே தேவன், உசியாவை ஆசீர்வதித்தார் ஏனெனில் அவன் தேவனுக்குப் பிரியமான காரியங்களைச் செய்து வந்தான். ஆனால் உசியாவோ பெருமை கொண்டு, தேவனுக்கு கீழ்ப்படிவதை நிறுத்தி விட்டான். அவன் குஷ்டரோகியாகி தன் வாழ்நாள் முழுவதும் சாகும்வரை தனியாக வாழ்ந்து வந்தான்.



உசியா ராஜா 60 வருடத்திற்கு மேலாக ஆட்சி செய்தான். அவன் இறந்தபோது, அவனுடைய குமாரன் யோதாம் அந்த இடத்திற்கு வந்து பதினேழு வருடம் ஆட்சி செய்தான். தேவன் அவனை ஆசீர்வதித்தார். ஏனெனில் அவன் ஏசாயா மற்றும் வேறு தீர்க்கதரிசிகள் சொன்ன தேவனுடைய வார்த்தையைக் கேட்டான்.



ஆகாஸ் என்பவன் யோதாம் ராஜாவின் மகன். ஆகாஸ் அரசாட்சி செய்யத் தொடங்கிய போது இருபது வயதாயிருந்தான், மற்றும் அவன் எருசலேமிலிருந்து பதினாறு வருடங்கள் ஆட்சி செய்தான். ஆகாஸ் தேவனைப் பற்றி எந்தக் கவலையும் கொள்ளவில்லை.



அவன் விக்கிரகங்களையும், தவறான தேவர்களையும் வழிபட்டதுமல்லாமல், மற்ற தேவனுடைய ஜனங்களையும் அப்படியே செய்ய வழிநடத்தினான். ஏசாயா அவனை எச்சரித்தும், ஆகாஸ் தேவனுடைய எச்சரிப்பை கவனிக்கவில்லை.

அவன் 35 வயதான போதே மரித்துப்போனான்.





அடுத்த ராஜாவாகிய எசேக்கியாவை, தேவன் ஆசீர்வதித்தார். ஏனெனில் அவன் விக்கிரகங்கள் மற்றும் தவறான தேவர்களை அழித்துப்போட்டதுமல்லாமல், உண்மையான தேவனை நோக்கி வேண்டுதல் செய்தான். யூதாவை பகைஞன் ஒருவன் தாக்கியபோது தன்னுடைய படை மிகவும் பலவீனமானது என்று எசேக்கியாவுக்கு தெரிந்தது. தேவனுடைய உதவிக்காக ஜெபிக்கும்படி ஏசாயாவிடம் கேட்டான்.

இந்தச் செய்தியை ஏசாயா ராஜாவுக்கு அனுப்பினான். "தேவன் சொல்லுகிறது என்னவென்றால்: இந்தப் படையைக் குறித்துப் பயப்படாதே ... அவர்களை நான் விழச்செய்வேன் ..."

விரைவில், எசேக்கியாவிடம் சண்டை போடாமலே அந்தப் படையானது திரும்பிச் செல்ல தேவன் செய்தார்.



தன்னைச் சுற்றி
உள்ள மக்கள்
தேவனைப்
பற்றி
அதிகமாக



யோசிக்காமலிருந்தாலும்,
ஏசாயா தேவனைப்
பற்றி அதிகமாக
யோசித்தான்.

ஒருநாள்,
அவனுக்கு
ஒரு
தரிசனம்
கிடைத்தது,

அது எப்படியென்றால்
நாம் தூங்காமல்
இருக்கும்போது
கிடைக்கிற
தரிசனமாகும்.



அந்தத்
தரிசனத்தில்,
தேவன்
எப்படி
மகிமை



பொருந்தியவர்,
பரிசுத்தமானவர்
என்று ஏசாயா
கண்டான்.

"யாரை நான்
அனுப்புவேன்?" தேவன்
தரிசனத்தில் கேட்டார்.
"இங்கே நான் இருக்கிறேன்.
என்னை அனுப்பும்," என்று
ஏசாயா பதிலளித்தான்.
தேவன் கேட்பதையெல்லாம்
செய்வதற்கும் அனுப்புகிற
இடத்திற்கெல்லாம்
செல்லுவதற்கும் ஏசாயா இ
ஷ்டமுள்ளவனாய்
இருந்தான்.





ஒருவேளை தேவனைப் பற்றி கேள்விப்படாத தூர இடங்களில் உள்ள மக்களிடத்தில் தேவன் தன்னை அனுப்புவார் என்று ஏசாயா நினைத்தான். ஆனால் இல்லை, தேவன் அப்படி செய்யவில்லை.



தன்னுடைய சொந்த தேசத்திலே சொந்த ஜனங்களுக்கு பேசும்படி தேவன் ஏசாயாவிடம் சொன்னார். தேவன் அவர்கள் பாவங்களினிமித்தம் கோபமாயிருக்கிறார் என்று சொல்ல வேண்டியதாயிற்று.



ஏசாயா இன்னும்  அநேக காரியங்களை ஜனங்களிடத்தில் சொல்ல வேண்டியதாயிருந்தது - தங்களுடைய பகைஞர்களிடத்திலிருந்தும், ...



... பாவத்திலிருந்தும் இரட்சிக்க வரப்போகிற வல்லமையான நபரைக் குறித்து பல ஆச்சரியமான காரியங்களைச் சொன்னான்.



யூத ஜனங்கள் அந்த நபரை "மேசியா" என்று அழைத்தார்கள். தேவன் தங்களுக்கு மேசியாவை அனுப்புவார் என்று எதிர்பார்த்தாலும், அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை அவர் வரவேமாட்டார் என்று நினைக்கும் விதமாகயிருந்தது.






மேசியாவைப்
பற்றி
ஏசாயா சொன்ன
அனைத்து
காரியங்களும்
அவனுடைய
புஸ்தகத்தில்
எழுதியிருக்கிறது.




ஒருவேளை
அவன் அவைகள்
நடப்பதற்கு பல
நூறு
வருடங்களுக்கு
முன்னால்
எழுதினாலும்
மேசியாவைப்
பற்றி
ஏசாயா சொன்ன
அனைத்து
காரியங்களும்
உண்மையாகவே
நடைபெறும்.

தேவனே நமக்கு ஒரு அடையாளத்தை தருவார் என்று ஏசாயா சொன்னான்.



அவன் சொன்னது, "இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனை பெறுவாள் மற்றும் அவருடைய பெயர் இம்மானுவேல் என்று அழைக்கப்படும்."



ஏசாயா தேவனுடைய
மேசியாவைப் பற்றி தான்
பேசுகிறார் என்று



ஜனங்களுக்குத்
தெரிந்தது ஏனெனில்
ஒரு பெண் கன்னிகையாக
இருந்து எப்படி ஒரு
குழந்தையைப்
பெற முடியும்.



மேலும்,
இம்மானுவேல் என்ற
பெயருக்கு தேவன்
நம்மோடிருக்கிறார்
என்று
அர்த்தம்!



"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின் மேல் இருக்கும். அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனை கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு." தேவனுடைய வாக்குத்தத்தமானது உண்மையிலே நடக்கும் என்று ஏசாயா நிச்சயமாக நம்பினதினாலே, அவன் அது ஏற்கெனவே நடந்தது போல பேசினான். இது தான் தீர்க்கதரிசனம்.

மேசியா பெரியவராய் இருப்பாரென்றும், மகத்தான காரியங்களை செய்வாரென்றும் ஏசாயா சொன்னான். மேசியா துன்பப்படுவாரென்றும் மற்றும் கொல்லப்படுவாரென்றும் ஜனங்களிடத்தில் சொல்லும்படி தேவன் ஏசாயாவினிடத்தில் சொன்னார். மேசியா எப்படி ஒரு புறம் பெரியவராகவும், வல்லமையுள்ளவராகவும் இருக்க மறுபுறம் பலவீனமாகவும் காயப்பட்டவராகவும் இருக்க முடியுமென ஏசாயா ஆச்சரியப்பட்டிருக்கலாம்.



ஆனால் ஏசாயா தேவனிடம் வாக்குவாதம் பண்ணவில்லை. தேவன் தனக்கு சொன்னதை அப்படியே மீண்டும் கூறினான். தன்னுடைய தீர்க்கதரிசனமானது உண்மையிலே நிறைவேற தேவன் உறுதிசெய்வார்.



மேசியா வரப் போகிறார் - யூதேயா மக்களுக்கு மாத்திரம் அல்ல. மேசியா "புற ஜாதியாருக்கு ஒளியாக இருப்பார்," என்று தேவன் ஏசாயாவிடம் சொன்னார். யூதரல்லாத உலகத்தின் எல்லா மக்களும் புற ஜாதிகள் என்றழைக்கப்படுகின்றனர். தேவன் எல்லோரையும் நேசிக்கிறார் மற்றும் அவருடைய மேசியா எல்லோரையும் ஆசீர்வதித்து பூமியின் கடை முனை மட்டும் இரட்சிப்பை கொண்டுவருவார்.



ஏசாயா வருங்காலத்தைப் பார்த்தான்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

ஏசாயா 1, 6, 7, 9, 53

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16